**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, வருடம் I – 2022**

**அரசியலமைப்புச் சட்டம் I**

*(மூன்று மணித்தியாலம்)*

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**<u>மூன்று</u>** வினாக்களுக்கு **<u>மட்டும்</u>** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. ஆட்சியாளர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து தடுக்கவும், நல்லாட்சியை மேம்படுத்தவும் சட்டவாட்சிக்கும் அரசியலமைப்புவாதத்திற்கும் இடையில் ஒன்றையொன்று குறைநிரப்பத்தகு உறவொன்று அவசியமென்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது சட்டவாட்சிக்கு அரசியலமைப்புவாதத்துக்கும் இடையில் இவ்வாறான குறைநிரப்பத்தக்க உ'றவொன்றை ஆதரிக்கவில்லை.

   நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் மூலம் உமது விடையை ஆதாரப்படுத்துக.

   (100 புள்ளிகள்)

2. **(அ) அல்லது (ஆ)** விற்கு விடை தருக

   (அ) சீலான் என்பது பல்லின நாடொன்றாகும். சீலானுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன்னதாக ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்ட 1945ஆம் ஆண்டின் அரசியலமைப்பானது, பாரபட்சமாக சட்டங்கள் ஆக்கப்படுவதைத் தடை செய்கின்றது. எந்தவொரு மதத்ததையும் சுதந்திரமாகப் பின்பற்றுவதைத் தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும், ஏனைய சமூகங்களை அல்லது மதங்களைச் சார்ந்தவர்களின் மீது விதிக்கப்படாத தடைகளை அல்லது மட்டுப்பாடுகளை குறித்த எந்தவொரு சமூகத்தை அல்லது மதத்தை சார்ந்தவர்களின் மீது விதிக்கத்தக்க மற்றும் ஏனைய சமூகங்கள் அல்லது மதங்களுக்கு வழங்கப்படாத சிறப்புரிமைகள் அல்லது நன்மைகளை வேறு ஏதேனும் சமூகம் அல்லது மதத்தினைச் சார்ந்தவர்களுக்கு வழங்கும் சட்டங்களை இயற்றுவதை இந்த அரசியலமைப்பின் 30வது உறுப்புரையானது தடை செய்கின்றது.

பிந்து என்னும் மதத்தைச் சார்ந்தவர்களால் வருடாந்தம் கொண்டாடப்படும் விழாவொன்றைத் தடைசெய்யும் வகையிலும், சீலானிக் மத்தியப் பகுதியில் வசிக்கும் மோரான் சமூகத்தைச் சார்ந்தவர்களை அச்சமூகத்தின் சொந்த நாட்டுக்கு நாடுகடத்தும் வகையிலும் பல சட்டங்களை 1965ஆம் ஆண்டளவில் சீலானியப் பாராளுமன்றமானது இயற்றியது. இச்சட்டங்களின் அமுலாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பலர் இது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, சீலானின் பாராளுமன்றம் மீயுயர்ந்ததெனவும், அதானால் எந்தவொரு சட்டத்தையும் ஆக்கவும் நீக்கவும் முடியுமென சீலானின் பிரதமர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

சீலானின் அரசியலமைப்பு அறிஞர்கள், சீலான் பாராளுமன்றித்தின் கட்டுப்பாடற்ற மீயுயர்தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியதான புதிய அரசியலமைப்பொன்று சீலான் ஏற்கவேண்டுமெனக் கருதுகின்றனர்.

மேற்போந்த நிலைமை தொடர்பில் விளக்கவுரையொன்றை எழுதுமாறு நீர் வேண்டப்படுகின்றீர். 1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பு மற்றும் 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஆகியவற்றிலிருந்து ஆதாரங்காட்டி உமது கட்டுரையை வரைக.

(~~50~~ 100 புள்ளிகள்)

(ஆ) பாரளுமன்றத்தின் மீயுயர் தன்மை என்ற கோட்பாடானது வரலாற்று ரீதியாக முழுமையானதாகவே கருதப்பட்டு வந்தது. பல்வேறு அரசியமைப்புக் கோட்பாடுகளின் தோற்றத்தின் காரணமாக பாரளுமன்றத்தின் மீயுயர் தன்மையெனும் கோட்பாடு இன்றளவில் நடைமுறைச் சாத்தியமற்றதொன்றாக உள்ளதென அறிஞர்கள் கருதுகின்றனர்.

நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் 1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளின் கீழ் பாராளுமன்ற மீயுயர் தன்மையெனும் கோட்பாட்டின் பின்னணியில் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(~~50~~ 100 புள்ளிகள்)

3. கமால் என்பவன் மெகாலாந்து என்ற நாட்டின் குடியியல் உரிமை ஆர்வலர் ஒருவனாவான். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் மெகாலாந்தின் தலைநகரிலுள்ள பிரதான புகையிரத நிலையத்தில் போராட்டமொன்றை கமாலும் அவரது சகாக்களும் ஏற்பாடு செய்தனர். அவர்களை உடனடியாக கலைந்து செல்லுமாறு உயர் பொலிஸ் அதிகாரயொருவர் உத்தரவிட்டார். கமாலும் அவரது சகாக்களும் இப்போராட்டத்திற்கான முன்கூட்டிய அனுமதியினை பொலிஸாரிடமிருந்து பெற்றிருக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார். அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கு முன் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லையெனக் குறிப்பிட்ட போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்காரணமாக, கமாலையும் ஏனைய இருவரையும் பொலிசார் கைது செய்ததுடன், அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் மூன்று இரவுகள் பொலிஸ் காவலில் அவர்கள் வைக்கப்பட்டனர். போராட்டக்காரர்களில் சிலர் இச்சம்பவங்கள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பதிவிட்டனர். நான்காவது நாள் கமால் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் அவனுக்குப் பிணை வழங்கப்பட்டது. அதனையுடனடுத்து, கமால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். பொலிஸ் கட்டுக்காவலில் கமால் வைக்கப்பட்டிருந்த போது கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் வாரத்தைகளால் துஷ்பிரயோகத்துக்குட்பட்டதாகவும் தெரிவிக்கின்றார்.

இதனிடையில், நிதி நெருக்கடி காரணமாக கமாலின் பெற்றோரால் அவரது சகோதரியான கோமளிக்கு புதிய கல்வித் தவணைக்கான புத்தகங்களை வாங்க இயலவில்லை. தவணையின் தொடக்கத்தில் முந்தைய ஆண்டுக்கான பாடசாலைக் கட்டணம் செலுத்தப்படாமையால் வகுப்பாசிரியரால் அவள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். பாடசாலைக் கட்டணத்தை செலுத்தினாலே அவள் பாடசாலைக்கு திரும்பவும் வரமுடியுமென அதிபர் வலியுறுத்தினார். கோமளியின் சகோதரர் கைது செய்யப்பட்டார் மற்றும் அரசாங்க விரோத செயற்பாட்டாளராக சந்தேகிக்கப்படுகின்றார் என்ற அடிப்படையில் கோமளிக்கு வழங்கப்பட்டுவந்த குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான உதவித்தொகையை அதிபரானவர் இடைநிறுத்தினார். கமால் தனது மற்றும் தனது சகோதரியின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கருதுவதுடன் உமது ஆலோசனையை நாடுகின்றார்.

கமாலுக்கு ஆலோசனை வழங்குக. மெகாலாந்தினது அரசியலமைப்பு இலங்கையின் அரசியலமைப்பை ஒத்ததெனக் கருதிக்கொள்க.

(100 புள்ளிகள்)

4. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

குமானோ என்பவர் டோங்கா என்ற நாட்டின் சனாதிபதியாவார். அரசியலமைப்பிற்கிணங்க டொங்காவினது உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

அண்மையில் குமானோ தனது சகோதரர் ஜுபானோவை டோங்காவின் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமித்தார். இந்த நியமனமானது எதேச்சாதிகாரமானதெனவும் அது நீதித்துறையின் சுதந்திரத்தை பலவீனப்படுத்துவதாகவும் சட்ட வல்லுநர்கள் வாதிடுகின்றனர். மேலும், சனாதிபதியின் இல்லத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பொன்றில் டொங்காவின் பிரதம நீதியரசாரான டியாரா குமானோவிடம் இந்நியமனம் தொடர்பிலான தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதாக ஊடகங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அடுத்த நாள், செய்தியாளர் சந்திப்பொன்றில் குமானோ இந்த அறிக்கையினை மறுப்புத்தெரிவித்தார். எந்தவொரு நீதிபதியின் அவ்வாறான நடத்தையினை தாம் சகித்துக் கொள்ளப்போவதில்லை எனவும், அத்தகையவர்களை உடனடியாக பதவியிலிருந்து நீக்குவேனெனவும் குமானோ தெரிவித்தார்.

(அ) டேங்காவின் அரசியலமைப்பானது இலங்கையின் அரசியலமைப்பை ஒத்ததெனக் கருதிக்கொள்க. ஜுபானோவின் நியமனத்தின் அரசியலமைப்பாந்தன்மை தொடர்பில் ஆராய்க. உமது விடையானது பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஏதேனும் பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(50 புள்ளிகள்)

(ஆ) ஊடகவியலாளர் சந்திப்பில் குமானோவினால் தெரிவிக்கப்பட்ட கூற்றினது தாக்கம் பற்றி நீதித்துறைச் சுதந்திரத்துடன் தொடர்புபட்ட கோட்பாடுகளின் பின்னணியில் ஆராய்க. உமது விடையானது பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஏதேனும் பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத் தப்படுதல் வேண்டும்.

(50 புள்ளிகள்)

5. அரசாங்கத்தின் அதிகாரங்கள் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதைக் குறைப்பதற்கான மிகச்சிறந்த வழி அத்தகைய அதிகாரங்களின் பயன்பாட்டின் மீது கடுமையான மற்றும் வெளிப்படையான கட்டுப்படுத்தல்களை முன்வைப்பதாகும். வலுவேறாக்கக் கோட்பாட்டினூடாக இதனை அரசியலமைப்புக்கள் அடைய எத்தனிக்கின்றன.

நீர் உடன்படுகின்றீரா? மேற்போந்த கூற்றை இலங்கையின் அரசியலமைப்புடன் தொடர்புறுத்தி ஆராய்க. அண்மையில் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களிலிருந்தான உதாரணங்களினால் உமது விடையானது ஆதாரப்படுத்தப் படுதல் வேண்டும். (100 புள்ளிகள்)

6. இவ்வினாவின் **நான்கு (04) பகுதிகளுக்கும்** விடை தருக.

ராமேன் என்பவன் சஹாரா என்ற நாட்டின் நிறைவேற்று சனாதிபதியாவான் என்பதுடன் சஹாராக் குடியரசின் அரசியலமைப்பு இலங்கையின் அரசியலமைப்பை ஒத்தது.

(அ) ஒரு கொலைக்குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட அவரது மைத்துனருக்கு சனாதிபதி ராமேன் பொதுமன்னிப்பு வழங்கினார். சனாதிபதி பொதுமன்னிப்பை வழங்குவதற்கு முன்னதாக அவ்வழக்கை விசாரித்த நீதிபதியிடம் அறிக்கையொன்றைப் பெறவில்லை.

(25 புள்ளிகள்)

(ஆ) ராமேன் தனது அமைச்சரவையில் ஒருதலைப்பட்சமான நியமனங்களைச் செய்கின்றார். இச்செயலானது அரசியலமைப்பு வாதத்தை பலவீனப்படுத்துவதாக எதிர்கட்சித்தலைவரான சுமோர் என்பவன் குறிப்பிடுகின்றான்.

(25 புள்ளிகள்)

(இ) அரசியலமைப்புப் பேரவையின் ஒப்புதலின்றி தனது மாமாவை சஹாராவின் மத்திய வங்கியின் ஆளுநராக ராமேன் நியமித்தார்.

(25 புள்ளிகள்)

(ஈ) சஹாராவின் பொதுத்தேர்தலானது, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்றது. ஆயினும், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவை தான் இழந்துள்ளதை உணர்ந்த ராமேன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

(25 புள்ளிகள்)

மேற்போந்த சூழ்நிலைகளில் ராமேனின் செயற்பாடுகளினது அரசியலமைப்பாந் தன்மையினை ஆராய்க. தர்க்கநியாயங்கள் மற்றும் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளாலும் உமது விடையானது ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

*******************